# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.33/2022** **நாள் : 28.07.2022**

கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து
குடிநீர் எடுத்துச் செல்லும் உந்து பிரதான குழாயில் மதகுவால்வு பொருத்தும் பணி மற்றும்
இணைப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளதால்
30.07.2022 காலை 8 மணி முதல் 31.07.2022 மாலை 8 மணி வரை
பகுதி - 5, பகுதி - 6, பகுதி - 8 மற்றும் பகுதி - 9 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்

சென்னை குடிநீர் வாரியம் தகவல்

கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் 1200 மி.மீ விட்டமுள்ள உந்து பிரதான குழாயில் மதகு வால்வு பொருத்தும் பணி மற்றும் இணைப்புப் பணி 30.07.2022 காலை 8 மணி முதல் 31.07.2022 மாலை 8 மணி வரை மேற்கொள்ளப்படவுள்ளதால் பகுதி - 5, வேப்பேரி, பெரியமேடு, பார்க் டவுன், சிந்தாதிரிப்பேட்டை, எழும்பூர், கொண்டித்தோப்பு, சௌகார்பேட்டை, ஏழு கிணறு, ஜார்ஜ் டவுன், பிராட்வே, திருவல்லிக்கேணி, புதுப்பேட்டை, பகுதி - 6, பெரம்பூர், புளியந்தோப்பு, நம்மாழ்வார்பேட்டை, புரசைவாக்கம், செம்பியம், ஓட்டேரி, பகுதி - 8, கெல்லீஸ், அயனாவரம், கீழ்ப்பாக்கம் தோட்டம், சேத்துப்பட்டு, டி.பி.சத்திரம், வில்லிவாக்கம் மற்றும் பகுதி - 9, நுங்கம்பாக்கம், தியாகராயநகர், சைதாப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளுக்கு குழாயின் மூலமாக வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மேலும், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள தலைமை அலுவலக புகார் பிரிவு தொலைபேசி எண்.044 - 45674567 மற்றும் கீழ்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| பகுதிப் பொறியாளர் - 5<br>கைபேசி எண்.8144930905<br>(இராயபுரம்) | வேப்பேரி, பெரியமேடு, பார்க் டவுன், சிந்தாதிரிப்பேட்டை, எழும்பூர், கொண்டிதோப்பு, சௌகார்பேட்டை, ஏழு கிணறு, ஜார்ஜ்டவுன், பிராட்வே, திருவல்லிக்கேணி, புதுப்பேட்டை |

| | |
|---|---|
| பகுதிப் பொறியாளர் - 6<br>கைபேசி எண்.8144930906<br>(திரு.வி.க.நகர்) | பெரம்பூர், புளியந்தோப்பு, நம்மாழ்வார்பேட்டை, புரசைவாக்கம், செம்பியம், ஓட்டேரி |
| பகுதிப் பொறியாளர் - 8<br>கைபேசி எண்.8144930908<br>(அண்ணா நகர்) | கெல்லீஸ், அயனாவரம், கீழ்ப்பாக்கம் தோட்டம், சேத்துப்பட்டு, டி.பி.சத்திரம், வில்லிவாக்கம் |
| பகுதிப் பொறியாளர் - 9<br>கைபேசி எண்.8144930909<br>(தேனாம்பேட்டை) | நுங்கம்பாக்கம், தியாகராயநகர், சைதாப்பேட்டை |
| தலைமை அலுவலகம்<br>(சிந்தாதிரிப்பேட்டை) | 044-4567 4567 (புகார் பிரிவு) |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்